த.வெ.க.வினரிடமிருந்து பெண்களைக் காப்பாற்றத் திரண்ட கழக மகளிர் அணி!



ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட தி.மு.க மகளிர் அணி சார்பில் த.வெ.க.அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகேஸ்வரி,தொண்டர் அணி அமைப்பாளர் அனிதா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி பங்கேற்று த.வெ.க.அரசைக் கண்டித்து கண்டன உரையாற்றினார்.உடன் பலர் உள்ளனர். நிகழ்வில் சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு,ஒருங்கிணைந்த நெல்லை மாவட்ட பொறுப்பாளர்கள் இரா.ஆவுடையப்பன் (மேற்கு) மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.(மத்திய) ம.கிரகாம்பெல் (கிழக்கு) ஆலங்குளம் சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன்,முன்னாள் அமைச்சர் மைதீன்கான்,மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ்,முன்னாள் எம்.பி. ஞான திரவியம் மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.நிகழ்ச்சி நிறைவில் மகளிர் அணியினர் த.வெ.க.அரசைக் கண்டித்து கண்டன முழக்கமிட்டனர்.



விருதுநகர் தெற்கு வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் விருதுநகர் தேசபந்து மைதானத்தில் பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பு விலைவாசியை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் கே. கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட செயலாளர் தங்கம் தென்னரசு துவக்கி வைத்தனர். இந்த கூட்டத்திற்கு தலைமைக் கழக சார்பில் வழக்கறிஞர் ஸ்ரீநிதி தலைமை தாங்கினார், மேயர் சங்கீதா இன்பம், ராஜபாளையம், சேர்மன் பவித்ரா, சியாம், மகளிர் அணி அமைப்பாளர்கள் சரஸ்வதி, வகிதா ரகுமான், பாண்டி, செல்வி, சுமதி, ராமமூர்த்தி, ஆவியூர் செல்வி, விருதுநகர் முத்துமாரி, சிவகாசி லதா, கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விருதுநகர் ஏ.ஆர்.சீனிவாசன், ராஜபாளையம் தங்கபாண்டியன், மாநில வர்த்தக அணி வனராஜன், நகர் செயலாளர் எஸ் ஆர் எஸ் தனபாலன், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, கே ஜி ராஜகுரு, ஒன்றிய செயலாளர்கள் விவேகம், ராஜ் பொன்னுத்தம்பி, சந்தான பாண்டியன், காரியாபட்டி ஆர்.கே.செந்தில் அருப்புக்கோட்டை நகரச் செயலாளர் ஏ.கே.மணி அரசு போக்குவரத்து கழக தொ.மு.ச. ராஜ செல்வம் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், நவநீதன், மல்லாங்கிணறு போஸ் இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டனர்.



த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர்குலைவு, விலைவாசி உயர்வைக் கண்டித்து மதுரை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் பழங்காநத்தம் ரவுண்டானாவில் மாவட்டச் செயலாளர்கள் பி.மூர்த்தி, கோ.தளபதி, சேடபட்டி மு.மணிமாறன் எம்.எல்.ஏ. ஆகியோர் வழிகாட்டுதலின்படி உமா சிங்கத்தேவன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பவானி ராஜேந்திரன், வழக்கறிஞர் ஷாமிலி பிரபா உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோபாலகிருஷ்ணன், தமிழரசன், முத்துராமலிங்கம், அக்ரி கணேசன், கணேசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, ப எஸ்.வி.சுதன் வரவேற்புரை நிகழ்த்த, சரவணபுவனேஸ்வரி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், நூர்ஜஹான், பிரமிளா தேவி, கிருஷ்ணவேணி பால்பாண்டியன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.



சேலம் மாவட்டத்தில் தி.மு.க மகளிர் அணி சார்பில் கோட்டை மைதானத்தில் மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ராணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் சேலம் மத்திய கிழக்கு மேற்கு மாவட்ட மகளிர் அணி மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

த.வெ.க அரசை கண்டித்து, நீலகிரி மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் உதகை ஏ.டி.சி., ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கோமதி வரவேற்றார், தலைமை கழக பிரதிநிதி கோவை வைஷ்ணவி கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் போஜன், லட்சுமி, நாசர் அலி, இளங்கோவன், திராவிடமணி, தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு உள்ளிட்ட கழகத்தினர் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர். மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஜெயந்தி நன்றி கூறினார்.

தமிழ்நாட்டில் தற்பொழுது நிலவும் ரீல்ஸ் ஆட்சியில் சட்டம் ஒழுங்குச் சீர்கேடு, பெண்களுக்கு எதிரான வன்முறை, குழந்தைகளுக்கு பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வு போன்றவற்றால் பொதுமக்கள் தினந்தோறும் அவதிப்படும் நிலைமையை உண்டாக்கிய த.வெ.க. அரசைக் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெனஸ் மைக்கேல் தலைமையில், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் லதா கலைவாணன் முன்னிலையில் நடைபெற்றது. மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன் கலந்து கொண்டு த.வெ.க. அரசைக் கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கண்டன உரையாற்றி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மகளிர் அணி நிர்வாகிகளுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், மகளிருக்கும், பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்தார்.